சாதனை சிகரம் தொட

# வெற்றிக்கு வழி

# 12

# தமிழ்

## Study material

## இயல் - 1

## உயிரினும் ஓம்பப் படும்

**அன்புசால் மாணவச் செல்வங்களுக்கு!**

***வணக்கம்,***


பலரின் வேண்டுகோளை ஏற்றோம் **2019 – 2020** ஆம் கல்வியாண்டிற்குரிய **பன்னிரண்டாம்** வகுப்பிற்கான பொதுத்தமிழ் பாடநூலில் இடம்பெற்றுள்ள **முதல் அலகிற்கான** வினாக்களுக்கான விடைகளை மட்டும் தங்கள் கனிவான பார்வைக்காக இணையத்தில் இன்று வெளியிட்டுள்ளோம்.

விரைவில் உங்கள் கைகளில் தவழ உள்ள உரைநூலில், கேள்விகள் எவ்வாறு கேட்கப்பட்டாலும் பதில் வழங்கும் வகையில் கூடுதல் வினாக்களையும், விடைகளையும் இணைத்து அமைத்துள்ளோம்.

**வெற்றிக்கு வழி உரைநூலைப் பயன்படுத்துங்கள்!**
**காலமகள் மேடை அமைப்பாள்**
**உங்கள் கனவுகள் நனவுகளாகும்**
**வாழ்க வளம்பெற்று!**

சிறந்த அன்புடன்,
**வெற்றிக்கு வழி குழுமம்.**

# இயல் -1
# உயிரினும் ஓம்பப் படும்





## நம்மை அளப்போம்



### பலவுள் தெரிக

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்காலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   ***இ) தொல்காப்பியம்*** ஈ) நன்னூல்
2. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ௩ மட்டும் சரி ***ஈ) க, ௩ இரண்டும் சரி***
3. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
   தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
   அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
   ***இ) அடிஎதுகை, சீர் மோனை*** ஈ) சீர்எதுகை, அடிமோனை
4. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
   கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
   அ) கருத்து 1 சரி ***ஆ) கருத்து 2 சரி***
   இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
5. பொருத்துக.
   அ) தமிழ் அழகியல் - 1. பரலி சு. நெல்லையப்பர்
   ஆ) நிலவுப்பூ - 2. தி.சு. நடராசன்
   இ) கிடை - 3. சிற்பி. பாலசுப்பிரமணியம்
   ஈ) உய்யும் வழி - 4. கி. ராஜநாராயணன்
   அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ***ஈ) 2, 3, 4, 1***

### குறுவினாக்கள்

**1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியத்தின் கருத்தைக் குறிப்பிடுக.**

- 'நடைபெற்றியலும்' – (கிளவியாக்கம் 26)
- 'நடைநவின்றொழுகும்' – (செய்யுளியல் 135)
- 'ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
  வெண்பா நடைத்தே கலி' (செய்யுளியல் 107)

என்ற நிலைகளில் நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கருத்துக்கூறுகின்றது.

**2. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான் பேக"** - இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.

| ஓசை நயமிக்க சொற்கள் | இலக்கணக் குறிப்பு |
|---|---|
| படாஅம், கெடாஅ, கடாஅ | செய்யுளிசை அளபெடை |
| நல்லிசை | பண்புத்தொகை |
| பேக | அண்மை விளிச்சொல் |

**3. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

- ❖ மாலைக்கதிரவன் மலைமேட்டில் தலையைச்சாய்க்கும் அழகு.
- ❖ வானமெல்லாம் காணப்படும் செந்நிறத்துப் பூக்காட்டின் அழகு
- ❖ அந்தச்சிவந்த பூக்காட்டைப் போன்று உழைத்துச்சிவந்த தொழிலாளர்களின் கைகள்
- ❖ அந்தத் தொழிலாளர்களின் விம்முகின்ற தோள்மீது வீற்றிருக்கும் வியர்வை வெள்ளம் இவற்றையெல்லாம், வியந்துபாட தமிழின் துணை வேண்டும் என்கின்றார் கவிஞர் சிற்பி.

**4. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

நான், விடியலில் மலரும் மலர்களின் வனப்பைக்கண்டு மகிழ்ந்தேன்.

## சிறுவினாக்கள்

**1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**

- ❖ மூவேந்தரும் கூடிப்பாரி மன்னனை எதிர்த்துப் போரிட வந்தனர். அப்போது கபிலர் நீங்கள் ஒரு சேர வந்தபொழுதும் பாரியின் பறம்பு மலையைப் பெறல் இயலாது என்றார்.
- ❖ குளிர்ந்த பறம்புமலை 300 ஊர்களை உடையது.
- ❖ அந்த 300 ஊர்களையும் ஆடியும் பாடியும் இரவலர்கள் பெற்றுச் சென்றுவிட்டனர்.
- ❖ நாங்கள் இருவர் மட்டுமே உள்ளோம்; பாரிமலையும் உள்ளது.

என்று வன்மையாகச் சொல்லவிரும்பிய கபிலர், வல்லின மெய்கள் மிகுதியாக இடம்பெறுமாறு பாடினார்.

**இதோ அந்த ஒலிக்கோலம் :**

*கடந்தடு தானை மூவிருங்கூடி*
*உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;*
*முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;*
*முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;*
*யாமும் பாரியும் உளமே;*
*குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே* **(புறம் -110)**

- ❖ உயிர் ஒலிகள், அவற்றுள்ளும் நெடில்கள், சில சொற்கள் திரும்பத் திரும்ப வரல் சங்கப் பாடல்களில் முக்கியமான பண்பாகும் எனக் காட்டும் ஒலிக்கோலங்கள் நிறைந்த சொற்கோலங்களில் மேலும் சிற்சில :

*"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்*
*கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம் - 145)*
*"புணரின் புணராது பொருளே; பொருள்வயின்*
*பிரியின் புணராது புணர்வே" (நற் - 16)*
*"நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை"* **(புறம் -290)**

**2. செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

- ❖ செக்கச்சிவந்த கதிரவன் மாலை வேளைகளில் மறைவான். இது இயல்பாய் நிகழும் நிகழ்வு.
- ❖ நாளெல்லாம் உலகுக்குத்தன் ஒளியை வழங்கினான் கதிரவன்.
- ❖ தொடர்ந்து உழைத்ததால் சோர்ந்து போனான்.
- ❖ சோர்ந்தோர் ஓய்வுபெறல் இயற்கையின் நியதிதானே!
- ❖ எனவே, 'கதிரவன் மலை மேட்டினைத் தனக்குத் தலையணையாகக் கொண்டு சாய்ந்து படுத்துக்கொண்டான்' என்கிறார் கவிஞர் தம் கற்பனைப்பார்வையில்!
- ❖ கதிரவன் மறையும் வேளையில் அந்தச்சிவந்த ஒளிவெள்ளம் வானில் படுகிறது.
- ❖ அந்த வானமோ, செக்கச்சிவந்த மலர்கள் நிறைந்த பூங்காட்டினைப்போலக் கவிஞரின் கவிப்பார்வையில் காட்சியளிக்கிறது.
- ❖ இயல்பான நிகழ்வுகளின் மீது கவிஞர் தம் கற்பனையை ஏற்றிக்கூறுவது நினைந்து நினைந்து மகிழ்தற்குரியது.

**3. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

| | |
|---|---|
| **இடம்** | தண்டியலங்கார உரைமேற்கோள் பாடலில், ஆசிரியர் 'தண்டி', தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையைக் கூறும்போது கூறியது. |
| **பொருள்** | கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது சூரியன். |
| **விளக்கம்** | ❖ தமிழ் அக இருளை அகற்றும்.<br>❖ சூரியன் புற இருளை அகற்றும்.<br>❖ தமிழுக்கும், சூரியனுக்கும் உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரில்லாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டியதால் இது பொருள் வேற்றுமையணி ஆயிற்று. |

**4. பின்வரும் இரு பாக்களிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே.<br>**- நன்னூல்** | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>**- சிற்பி பாலசுப்பிரமணியம்** |

**"பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையி னானே"**
**- நன்னூல்**

- ❖ பழமை அழிவதும், புதுமை புகுவதும் காலமாற்றத்தால் குற்றமாகக் கருதப்படமாட்டாது.
- ❖ ஆனால், மாற்றம் என்பது வளர்ச்சிப் பாதையை நோக்கியும், விரும்பத் தகுந்த வகையிலும் அமைந்தால்தான் அந்தச் சமுதாயம் மேன்மை அடையும்.

**மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு**
**மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!**
**- சிற்பி பாலசுப்பிரமணியம்**

- ❖ பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது முத்தமிழ்.
- ❖ கடையெழு வள்ளல்களை ஈன்று தந்தது முத்தமிழ்.
- ❖ அரசன் முதல் ஆண்டிவரை அனைவர் செந்நாவிலும் தவழ்ந்து இருந்தது முத்தமிழ்.
- ❖ 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்றிருந்தது அந்நாளில் தமிழ்.
- ❖ இன்று தமிழன் தமிழ் பேசத் தயங்குகிறான்.
- ❖ எனவே, 'தமிழ் எங்கும் எதிலும் திகழவேண்டும்' என்பது சிற்பியின் ஆவல்.
- ❖ நன்னூலார் **'வளர்ச்சியை நோக்கிப் பழமையை விட்டுவிடலாம்'** என்றார்.
- ❖ சிற்பி, தமிழரிடம் தமிழைப் புதுப்பித்தல் வேண்டும் மெய் சிலிர்க்க **பழமைத்தமிழ் மீண்டும் தழைத்து ஓங்க வேண்டும்** என்றார்.

## நெடுவினாக்கள்

**1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

| **கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளாவன** |
|---|
| ♣ ஒலிக்கோலங்கள்<br>♣ சொற்களின் புலம்<br>♣ தொடரியல் போக்குகள் |

**ஒலிக்கோலங்கள் :**

- ❖ மொழிசார்ந்த கவிதை இசையோடும், இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது. ஓசையும், பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதுவே, ஒலிப்பின்னல் ஆகும்.

*கடந்தடு தானை மூவிருங்கூடி*
*உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;*
*முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;*
*முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;*
*யாமும் பாரியும் உளமே;*
*குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே* **(புறம் -110)**

இந்தப் பாடலை வன்மையாகச் சொல்ல விரும்பிய கபிலர் வல்லின மெய்களை மிகுதியாக அமைத்து அந்த ஒலிக்கோலத்தைப் படைத்தார்.

**சொற்களின் புலம் :**

- ❖ சொற்களின் புலம் என்பது, சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு.
- ❖ இதனைத் தொல்காப்பியம், 'தொகைநிலை' என்று குறிப்பிடும்.
- ❖ 'நீர்படு பசுங்கலம்' இது ஒரு சொல் போலவே அமையும் தொகைமொழி.
- ❖ வைகுறு விடியல், புல்லென்மாலை, சின்னீர், நகைக்கூட்டம் என்பனபோன்று ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களாகவும் வரும்.

**தொடரியல் போக்குகள் :**

- ❖ ஒலிக்கோலமும், சொற்புலமும், சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்துகின்றன.
- ❖ தொடரியல் வடிவோ பாத்திகட்டி, வரப்புயர்த்துகிறது.
- ❖ எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என வரும் மரபு சங்கப் பாடல்களில் பிறழ்ந்தும் வரும்.
- ❖ தொடரியல் பிறழ்வுநிலை பாடலின் இறுதியிலேயே பெரும்பாலும் காணப்படும்.
- ❖ நம்பி நெடுஞ்செழியன் இறந்தான்.
- ❖ 'பேரெயின் முறுவலர்' அவனுடைய சாவுச்சடங்கு சர்ச்சைக்கு உள்ளானபோது பாடினார்.
- ❖ 'தொடியுடைய தோள் மணந்தனன்' என்று தொடங்குகிறார்.
- ❖ ஒவ்வோரடியும் தன்னிறைவோடு முடிகின்றன.
- ❖ பதினெட்டுப் பண்புகளை வரிசைப்படுத்தினார்.

  நிறைவாக,

  ***"இடுக வொன்றோ, சுடுகவொன்றோ;***
  ***படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே"*** என்றார்.

- ❖ 'ஆங்குச் செய்பவெல்லாம் செய்தனன் ஆதலின்' என்க் கூறிவிட்டுப் 'போடா போ – புதைத்தால் புதை; சுட்டால் சுடு' என்றார் கவிஞர்.
- ❖ பாடலின் தொடரியல் சார்ந்த வடிவமைப்பு இதற்குத்துணை நிற்கின்றது.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**பாரதியின்,**
- ♣ மொழிப்பற்று
- ♣ சமூகப்பற்று

**மொழிப்பற்று :**

- ❖ தமிழை வளர்ப்பதே கடமை.
- ❖ புதிய புதிய யோசனை, உண்மை, இன்பம், தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.
- ❖ தமிழ் நாடு வாழ வேண்டும்.
- ❖ தமிழ்ப் பள்ளிகள் மலிதல் வேண்டும்.

**சமூகப்பற்று :**

- நம்மைவிட மெலியவர்களுக்கு நாம் இரங்கி, அவர்களை நமக்கு நிகராக்கிவிட வேண்டும்.
- உள்ளமே உலகம்.
- நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களைக்கண்டு குடல் குலுங்கச் சிரித்தாவது, அவர்களின் மடமையை அகற்ற வேண்டும்.
- இன்னும் பல உயரங்களைத் தொட வேண்டும்.
- நோய்கள் தீர வேண்டும்.
- பள்ளிகளில் நவீனக்கலைகள் கற்பிக்கப்பட வேண்டும்.
- ஆணும் பெண்ணும் சமம்.
- பெண்ணடிமை கூடாது.
- தொழில்கள், வியாபாரங்கள் இயந்திரங்கள் வளர்ந்து பெருக வேண்டும்.
- சங்கீதம், சிற்பம், இயந்திர நூல், பூமி நூல், வான நூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை அனைத்தும் மலிந்திட வேண்டும்.
- முயற்சிகள் ஓங்கவேண்டும்.
- இவையே, பாரதியின் கடிதம் வாயிலாக நாங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியனவாகும்.

**3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

- எழுதுகோல் எனும் உளிகொண்டு, படிப்போர் சிந்தையை ஈர்க்கும் விந்தையைத்தன் விரல் வண்ணத்தில் வடித்தெடுப்பவர் கவிஞர். சிற்பி பாலசுப்பிரமணியன். அவர் தமிழின் சீரிளமைத்திறம் குறித்து வியந்து கூறுவதை இங்குக்காண்போம்.
- செக்கச்சிவந்த கதிரவன் நாளெல்லாம் உழைத்தான்; ஓய்ந்தான்; சோர்ந்தான்; மலைமேட்டினைத் தனக்குத் தலையாகக்கொண்டு துயில்கொண்டான்.
- செம்பரிதியைப்போல, செந்நிறப்பூக்காட்டைப் போலச் சிவந்து நொந்தன தொழிலாளரின் கைகள்.
- வியர்வை வெள்ளம் அவர்களின் விம்முகின்ற தோள்மீதில் முத்துகளாய் வீற்றிருந்தன.
- தமிழ் எங்கள் கவிதை வெறிக்கு உணவு.
- பாண்டியரின் தமிழ்ச்சங்கத்தில் வீற்றிருந்தவள்.
- 'பாரி' முதலான கடையெழு வள்ளல்களை ஈன்று தந்தவள்.
- மீண்டும் அந்தப் பழமைநலம் புதுக்குதற்குத் தமிழ்க்குயிலே கூவிவருதல் வேண்டும்.
- அடைபட்ட சிங்கம் கூண்டை உடைத்து எழுந்து வெளிவருவதைப்போல, நம்மவர்களின் மனங்களில் மண்டிக்கிடக்கிற அந்நியமொழி மோகத்தை உடைத்தெறிந்து தமிழ்மொழி, குளிர்பொதிகைத் தென்தமிழாய்ச்சீறி வரவேண்டும், என்கிறார் சிற்பி.
- இறைவன் பல உலகங்களையும், உயிர்களையும் படைத்தவன் என்றாலும் இளமை குன்றாதவன்.
- அவனைப்போலத் தமிழும், கன்னடம், மலையாளம், துளு போன்ற பலமொழிகளைப் படைத்து வழங்கினாலும் தன் இளமை மாறாதது.

***"உன்னுதிரத்தே உதித்தே ஒன்றுபல ஆகிடினும் சிதையா உன்***
***சீரிளமைத்திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"***

என்ற சுந்தரனாரின் கூற்று இங்கு ஒப்பிட்டு மகிழ்தற்குரியது.

**முடிவுரை :**

***'மிகச்சிறந்தவர்கள் எப்பொழுதும் ஒன்றையே நினைப்பார்கள்'*** என்பதைப் போல கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியனும், சுந்தரனாரும் தமிழின் சீரிளமைத்திறங்குறித்து, வியந்து மகிழ்வது நமக்கும் மகிழ்வைத் தருகிறது.

4. 'சொல்லோவியங்கள் (கவிதை) என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| ♣ மங்கல விளக்கேற்றம் | : | *பன்னிரண்டாம் வகுப்பு மாணவியர்* |
| ♣ தமிழ்த்தாய் வாழ்த்து | : | *அனைவரும்* |
| ♣ வரவேற்புரை | : | *திருபெறு.க.வளவன் தமிழாசிரியர்* |
| ♣ முன்னிலை | : | *திருபெறு.கு.மருது பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர்* |
| ♣ தலைமையுரை | : | *திருபெறு.அ.பாரி தலைமையாசிரியர்* |
| ♣ நூல் வெளியீடு | : | *திருபெறு.கு.புகழேந்தி (முன்னாள் தமிழாசிரியர்)* |
| ♣ முதல் நூலைப்பெறுபவர் | : | *திருமதி.மு.கீதா (உள்ளூர்த் தமிழ்ப்பற்றாளர்)* |
| ♣ நூல் நயவுரை | : | *திருமதி.ப.வளர்மதி தமிழாசிரியர்* |
| ♣ ஏற்புரை | : | *திருபெறு.அ.குமரன் தமிழாசிரியர் (கவிதை நூலை இயற்றியவர்)* |
| ♣ நன்றியுரை | : | *செல்வன் ப.பழனிவேலு(பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்)* |
| ♣ நாட்டுப்பண் | : | *அனைவரும்* |

**நன்றியுரை**

*"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!*
*செயலினை மூச்சினை உனக்களித்தேனே*
*நைந்தாய் எனில் நைந்துபோகும் என்வாழ்வு!*
*நன்னிலை உனக்கெனில் எனக்குந்தானே!"*

- வாழ்த்துதலுக்கும், வணங்குதலுக்கும் உரிய சான்றோர்கள் நிறைந்திருக்கின்ற இந்த அவைக்கு முதற்கண் என் வணக்கம்.
- நிகழ்ச்சித் தொடக்கமாக மங்கல விளக்கேற்றம் செய்த மாணவியர்க்கும்,
- கவிதைத்தமிழில் அனைவரையும் வரவேற்ற நம் பள்ளியின் தமிழாசிரியர் ஐயா வளவன் அவர்களுக்கும்,
- இந்நிகழ்வினுக்கு முன்னிலை ஏற்றிருக்கின்ற நம் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் ஐயா மருது அவர்களுக்கும்,
- தலைமையுரையேற்று, தம் நுண்மாண் நுழைபுலத்தோடு சிறப்பாகத் தலைமையுரையாற்றிய நம் பள்ளியின் தலைமையாசிரியர் ஐயா பாரி அவர்களுக்கும்,
- நூலை வெளியிடப் பெரிதும் பொருத்தமான, நம் பள்ளியின் முன்னாள், தமிழாசிரியர் ஐயா புகழேந்தி அவர்களுக்கும்,
- தன் தெளிந்த சிந்தனையால் இந்த நூலுக்கு நயவுரை வழங்கிய நம் பள்ளியின் தமிழாசிரியர் திருமதி. வளர்மதி அவர்களுக்கும்,
- அனைவரும் போற்றிப்பாராட்டிய போதும் நயவுரை வழங்கிய ஆசிரியர் புகழ்ந்துரைத்தபோதும்,
- 'பணியுமாம் என்றும் பெருமை' என்று பெரிதும் அடக்கத்துடன் புகழுரைகளை அமைதியாக ஏற்று ஏற்புரை வழங்கிய ஐயா குமரன் அவர்களுக்கும்,
- இங்குத்திரளாகக் குழுமியிருக்கும் மாணவ நண்பர்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும், அனைத்துவகை அலுவலக நண்பர்களுக்கும் நன்றி நவிலும் நேரமிது!
- இங்குக் குழுமியிருக்கிற ஒவ்வொருவர்மீதும், ஆயிரமாயிரம் நன்றி மலர்களைத் தூவி என் உரைக்குத்திரையிட்டு விடைபெறுவேன்.

**நன்றி வணக்கம்!**



# இயல் - 1
# உயிரினும் ஓம்பப் படும்
## தமிழாய் எழுதுவோம்

### இலக்கணத் தேர்ச்சி கொள்

1. பிழையான தொடரைக் கண்டறிக.
   அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
   ஆ) மலைமீது ஏறி கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
   **இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**
   ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடர்
   **அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**
   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
   ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

**3. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள் யாவை?**

| | |
|---|---|
| **முடிந்தால் தரலாம்** *(இயலுமானால் தரலாம்)* | மனநலங்குன்றியோர் இல்லத்திற்குப் பொருளுதவியை ***'உங்களால் முடிந்தால் தரலாம்'*** என்றார் அவர். |
| **முடித்தால் தரலாம்** *(ஏதேனும் ஒரு பணியை நிறைவேற்றினால் தரலாம்)* | "தாள்களை, தேர்வை ***எழுதி முடித்தால் தரலாம்***" என்றார் ஆசிரியர். |

**4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

- மொழியின் இயல்பை உணர்ந்தும்.
- இலக்கண விதிகளை அறிந்தும்
- முயற்சியும், பயிற்சியும் கொண்டும்
- கவனத்துடன் எழுதினால் தமிழில் பிழையின்றி எழுதலாம்.

# இயல் - 1
# உயிரினும் ஓம்பப் படும்
## மொழியை ஆள்வோம்!



### தமிழாக்கம் தருக

| | | |
|---|---|---|
| 1. | Learning is a treasure that will follow its owner everywhere. | கற்றல் என்னும் புதையல் தன் முதலாளியை எல்லா இடங்களிலும் தொடரும். |
| 2. | A new language is a new life. | ஒரு புதுமொழி ஒரு புது வாழ்க்கை ஆகும். |
| 3. | If you want people to understand you, speak their language. | உன்னை மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அவர்கள் மொழியில் பேசு. |
| 4. | Knowledge of languages is the doorway to wisdom. | மொழிகளின் அறிவு ஞானத்தின் திறவுகோல். |
| 5. | The limits of my language are the limits of my world. | எனது மொழிகளின் எல்லையே, எனது உலகத்தின் எல்லை. |

### கீழ்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

- மொழி வரலாறு (மு. வரதராசனார்)

**வினாக்கள் :**

1. மொழி என்பது யாது?
2. மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவி எது?
3. பெற்ற தாயின் முதல் வேட்கை என்ன?
4. தாய் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி எது?
5. குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது எது?
6. மனத்திற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு யாது?
7. மொழியின் ஆசிரியர்கள் யாவர்?
8. மொழியை வளர்ப்பவரும், மொழியால் வளர்பவரும் யாவர்?
9. வேறுபாடறிந்து தொடரில் அமை அரிய, அறிய / மனம், மணம்.
10. ‘வேட்கை’ என்னும் சொல்லின் பொருள் என்ன?
11. ‘வளர்ச்சி’ என்னும் சொல்லிற்குரிய எதிர்ச்சொல் தருக.
12. ‘மொழி வரலாறு’ – எழுதியவர் யார்?
13. ஆசிரியர் - பிரித்துப்பொருள் தருக.
14. ‘துன்பம்’ என்னும் சொல்லுக்குரிய எதிர்ச்சொல்லைப் பத்தியிலிருந்து எடுத்தெழுதுக.

## இலக்கிய நயம் பாராட்டுக

முச்சசங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!
- கண்ணதாசன்

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ♣ முன்னுரை |
| ♣ திரண்ட கருத்து |
| ♣ தொடை நயம் |
| ♣ அணி நயம் |
| ♣ சந்த நயம் |
| ♣ தலைப்பு |
| ♣ முடிவுரை |

**முன்னுரை :**

"மழையோ சில நாள்களில் பெய்யும் மலர்களோ சில வேளைகளில் பூக்கும்". ஆனால், கண்ணதாசனின் பாட்டுப்பூக்கள் பூக்காத நாட்களே இல்லை எனலாம். அத்தகு கவியரசு கண்ணதாசனின் பாடல்களுள் ஒன்றன் நயங்களைக்குறித்து இங்குக் காண்போம்.

**திரண்டகருத்து :**

- ❖ முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்களைக் கூட்டி
- ❖ அச்சங்கங்களுக்கு, புலமையில் முதுமையுடைய புலவர்கள் பலரை வரவேற்று,
- ❖ அச்சங்கங்களிலே, அளவிடமுடியாத அளவு பல்வேறு பொருள்களை விவாதித்து
- ❖ தமிழின் சொற்கள் அனைத்தையும் ஒன்றாகச் சங்கமிக்கச் செய்து,
- ❖ சுவை மிகுந்த நூல்கள் பலவற்றைப் படைத்தளித்து,
- ❖ யாப்பிலும், அணியிலும் பல்வேறு அற்புதங்களை அமைத்த பெரும் பெருமையுடைய தாயே தமிழே!

**தொடை நயம் :**

- ❖ *'தொடுக்கப்படுவதுதான் தொடை'* அழகிய மலர்களைக்கொண்டு மாலையைத்தொடுப்பதைப் போல எதுகை, மோனை ஆகியவற்றில் தொகுக்கப்படுவதே தொடை ஆகும்.

**மோனை நயம் :**

***"பாட்டுக்கு வீணை,***
***கவிதைக்கு மோனை"***

என்பதற்கிணங்க இப்பாடலில் மோனைநயம் சிறப்புற அமைந்துள்ளது.

- ❖ செய்யுளில் சீர்தோறும், அல்லது அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது மோனை நயமாகும்.

| | |
|---|---|
| ***சீர்மோனைகள்*** | ❖ **மு**ச்சங்கங், **மு**துபுலவர்<br>❖ **அ**ச்சங்கத், **அ**ளப்பரிய<br>❖ **சொ**ற்சங்க, **சு**வைமிகுந்த<br>❖ **அ**ற்புதங், **அ**மைத்த |

**எதுகை நயம் :**

***"இயற்கைக்கு அழகு பொய்கை***
***கவிதைக்கு அழகு எதுகை"***

என்பதற்கிணங்க இப்பாடலில் மோனைநயம் சிறப்புற அமைந்துள்ளது.

- செய்யுளில் சீர்தோறும், அல்லது அடிதோறும் முதலெத்து அளவொத்திருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது எதுகை ஆகும்.

| | |
|---|---|
| ***அடிஎதுகைகள்*** | ❖ மு**ச்**சங்கங், அ**ச்**சங்கத்<br>❖ சொ**ற்**சங்க, அ**ற்**புதங்க |

**இயைபு நயம் :**

- ஒரு செய்யுளின் அடிதோறும் இறுதி எழுத்தோ, அல்லது சீரோ ஒன்றிவரத்தொடுப்பது இயைபுத் தொடையாகும்.

| | |
|---|---|
| சீர் இயைபுகள் | ❖ கூட்**டி**, கூட்**டி** |
| அடி இயைபுகள் | ❖ கூட்**டி**, கூட்**டி**, கூட்**டி**, பெருமாட்**டி** |

**அணி நயம் :**

- முச்சங்கங் கூட்டி, முதுபுலவர் தமைக்கூட்டி என்பனவாக இயல்பான செய்திகளைத் தொகுத்துக் கூறியதால் இச்செய்யுளில் 'இயல்பு நவிற்சி அணி' பயின்றுவந்துள்ளது எனலாம்.

**சந்த நயம் :**

- செவிகளுக்கு இனிய ஓசை தருமாறு புனையப்படுவதே சந்தம் ஆகும். யாப்பு அமைவினைச் சந்தோம் என்போம்.
- இசையுடன் பாடும் வகையில் இனிய ஓசையுடன் அமைந்து இனிய சந்தத்தோடு இச்செய்யுள் அழகுமிளிர அமைந்துள்ளது.

**தலைப்பு**

" தமிழ்ப் பெருமாட்டி "

**முடிவுரை :**

- இறைவன் படைத்த மனித உயிர்கள் அழிந்துபோகின்றன. ஆனால், மனிதன் படைத்த இலக்கியங்கள் என்றென்றும் சாகாவரம் பெற்று மிளிர்கின்றன.
- அந்த வகையில் கண்ணதாசனின் இந்தச்செய்யுளும் சாகாவரம் பெற்று என்றென்றும் மிளிரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

*(தாமரை இலை நீர்போல, கிணற்றுத்தவளை போல, எலியும் பூனையும்போல, அச்சாணி இல்லாத தேர்போல, உள்ளங்கை நெல்லிக்கனிபோல)*

| | | |
|---|---|---|
| 1. | தாமரை இலை நீர்போல் | கருத்து வேறுபாடுகள் மிகுந்த கணவனும் மனைவியும் பிரிந்திருந்தால் சமுதாயம் பழிதூற்றுமே என்றஞ்சி **தாமரை இலை நீர்போல** ஒரே வீட்டில் வாழ்ந்திருந்தனர். |
| 2. | கிணற்றுத்தவளை போல | 'நாடாளுமன்றத் தேர்தல் பத்தாண்டுகளுக்கு ஒருமுறைதான் நிகழும்' என்றான் **கிணற்றுத்தவளை போல** வாழ்ந்துவரும் என் நண்பன். |
| 3. | எலியும் பூனையும் போல | நாளுக்குநாள் **எலியும் பூனையும் போல** வாழ்ந்துவரும் தம்பதியினர் பெருகி வருகின்றனர். |
| 4. | அச்சாணி இல்லாத தேர் போல | தலைவனை விபத்தில் இழந்த குடும்பம் **அச்சாணி இல்லாத தேர் போல** நிலைகுலைந்தது. |
| 5. | உள்ளங்கை நெல்லிக்கனி போல | பள்ளிப்பொதுத்தேர்வில் 590 மதிப்பெண்களைப் பெற்ற எனக்கு, அரசு மருத்துவக்கல்லூரியில் இடம் கிடைக்கும் என்பது **உள்ளங்கை நெல்லிக்கனிபோல**த் தெளிவாகத் தெரிந்தது. |

## ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக

**தாய் மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்.**
எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய் மொழியே துணைநிற்கும் - இதனை வலியுறுத்தி பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

தாய்மொழிக் கல்வியின் தேவை - தாய்மொழிச் சிந்தனை – அறிஞர்களின் பார்வை - கற்கும் திறன் - பயன் - இன்றைய நிலை.

**தலைப்பு – 'தாய் மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்'**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ♣ முன்னுரை |
| ♣ தாய்மொழிக் கல்வியின் தேவை |
| ♣ தாய்மொழிச் சிந்தனை |
| ♣ அறிஞர்களின் பார்வை |
| ♣ கற்கும் திறன் |
| ♣ தாய்மொழிக் கல்வியின் பயன்கள் |
| ♣ இன்றைய நிலை |
| ♣ முடிவுரை |

**முன்னுரை :**

❖ இன்றையக் காலச்சூழலில் 'தாய்மொழி வழிக்கல்வி' என்பது பழமைவாதமாகக் கருதப்படுகிறது.

❖ உலகமயமாக்கல் நிலவும் இந்தக்காலச் சூழலில் தாய்மொழிக்கல்வி பயன்தருமா? என்ற எண்ணம் பெற்றோரிடம் பெரிதும் படிந்து கிடக்கிறது.

**தாய்மொழிக் கல்வியின் தேவை :**

❖ ஓர் இனத்தின் இதயம் அதன் தாய்மொழியே! ஓர் இனத்திடமிருந்து தாய்மொழியைப் பிரித்துவிட்டால் மொழியும், இனமும் சிதைந்து விடும். எனவே, தாய்மொழிக்கல்வி தேவை.

**தாய்மொழிச் சிந்தனை :**

❖ நம் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருப்பது தாய்மொழியே!

❖ ஒருவருக்கு எத்தனை மொழிகள் தெரிந்திருந்தாலும், அவரின் சிந்தனை தெளிந்த நீரோடையாய் ஊற்றெடுப்பது தாய்மொழியில்தான்!

**அறிஞர்களின் பார்வை :**

❖ தாய்மொழியில் கற்பிப்போரும், கற்போரும் தங்கள் எண்ணங்களைச் செயலாக்க முடிகிறது.

❖ இதனால் கற்பவரின் தன்னம்பிக்கை பெருகும், என்பர் அறிஞர்.

❖ நம் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களும், தாய்மொழியில் ஆக்கப் பூர்வமான சிந்தனைகளைக் குழந்தைகள் மத்தியில் கொண்டுவர முடியும், என்றார்.

**கற்கும் திறன் :**

***"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்***
***தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" -*** என்றார் பாரதியார்.

❖ அனைத்துத்துறை நூல்களும் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும்.

❖ அவற்றைப் படித்துப் பயன்படுத்தினால்தான் கற்கும் திறன் வளரும்.

**தாய்மொழிக் கல்வியின் பயன்கள் :**

❖ தங்கள் தாய்மொழியைக் குழந்தைகள் பேசுவது எளிது.

❖ சிந்திப்பது எளிது.

- ❖ சமூகத்துடன் ஒத்துப்பார்ப்பது எளிது.
- ❖ கற்கும் திறன் நாளடைவில் பெருகுகிறது.
- ❖ கற்பிப்பவருக்கும் சுமையின்றிச் சுகமாகக் கற்பிக்க முடிகிறது.

**இன்றைய நிலை :**

- ❖ அனைத்து நாடுகளிலும், தாய்மொழியில் கல்வி கற்க உரிமையுண்டு.
- ❖ ஆனால், நமது நாட்டில்தான் தாய்மொழிக்கல்வியில் பயிலப்போராட வேண்டி உள்ளது.

**முடிவுரை :**

- ❖ மொழி என்பது வெறும் எண்ணங்களின் கருத்தூர்தி மட்டுமன்று.
- ❖ அது நம் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்திருப்பது.
- ❖ உலக நாடுகளனைத்தும் தாய்மொழிக்கல்வியின் அவசியத்தை உணர்ந்துள்ளன.
- ❖ நாமும் உணர்ந்தால்தான் நம் நாடு உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்க முடியும்!

***"ஏற்றம் கொண்ட தேசங்கள் யாவும்<br>தோற்றம் கண்டநாள் முதல் கற்பது<br>தாய்மொழி வழியிலே!***

## மொழியோடு விளையாடு



### எண்ணங்களை எழுத்தாக்குக



**உளியே மொழி எழுது<br>என் நெஞ்சுள் நிறைந்தாய் நீ<br>உன் ஒலியுள் மறைந்தேன் நான்<br>புதுமொழி படைப்போம் வாவா.....**

### அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்<br>தாயின் குரலில் உயிரின் ஒலி<br>**உயிரின் ஒலியில் உணர்வின் மொழி<br>உணர்வின் மொழியோ உன்னதம் தருமே!**

### மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்


| | | |
|---|---|---|
| எ.கா | கவிஞர் ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் | **கவிமணி** |
| 1. | தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். | **மறைமலை அடிகள்** |
| 2. | தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். | **தமிழ் ஒளி** |
| 3. | சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம். | **புதுமைப்பித்தன்** |
| 4. | முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். | **கோதை** |

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)


**செய்து கற்போம்**

**தமிழறிஞர்கள் எழுதிய கடிதங்களுள் ஏதேனும் மூன்றினைத் திரட்டி வகுப்பறையில் வழங்குக.**


- **04.12.1945ல் கலைஞர் கருணாநிதி அவர்கள், திருவாரூரை சேர்ந்த தனது தோழர் திருவாரூர் கு. தென்னன் என்பவருக்கு எழுதிய கடிதத்தை சங்குசக்கரம் போன்ற வடிவத்தில் எழுதியிருக்கிறார்.**
- அக்கடிதத்தின் முடிவு அதன் நடுவே, கலைஞரின் மு.க எனும் கையொப்பத்துடன் முடிகிறது.


4.12.45


- **ஈழத்தின் மூத்த எழுத்தாளர் இளங்கீரனின் கடிதம்! வாழ்வின் சோகங்களையும் கனவுகளையும் சாதனைகளையும் சுமந்துகொண்டு விடைபெற்ற இலக்கிய ஆளுமையின் உள்ளம் பேசிய கதைகள்!**


Marakatham
CEYLON TAMIL MONTHLY
CABLES: MARAKATHAM
231, Wolfendhal Street,
COLOMBO-13
(CEYLON)
24/10/89
S. ILANKEERAN
YOUR REF: OUR REF: 36, SIR RAZEEK FAREED
MAWATHA
NEGOMBO. 19-Sep:1989
Published in Colombo
By
THE MARAKATHAM
PUBLISHERS
and
Edited by
ILANKEERAN
Branch Office:
34, PIRAPPANKULAM ROAD,
JAFFNA.
India Office:
393, PYCROFTS ROAD,
MADRAS-14.

- **பாரதியின் மகள் சகுந்தலா பாரதி வ.ராமசாமி அய்யங்காருக்கு எழுதிய கடிதம்**



- **நண்பருக்கு மு.கருணாநிதி எழுதிய கடிதம்**



## நிற்க அதற்குத் தக

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி / தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும் தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.**

| செயல்பாடு | சரி – காரணம் | தவறு – மாற்றம் |
|---|---|---|
| **எ.கா.** பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல் | சரி. பொருள்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல் | **தவறு** | ❖ எச்சில் துப்புவதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களையே பயன்படுத்துதல் வேண்டும், இல்லையென்றால் தொற்றுநோய்கள் பரவும். |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல் | **தவறு** | ❖ காகிதங்களைக் கிழித்தல் முதல் தவறு.<br>❖ அவ்வாறு கிழிக்கவேண்டிய சூழல் எழுந்தால், உரிய குப்பைத்தொட்டியைப் பயன்படுத்த வேண்டும். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் | **தவறு** | ❖ மாணவர்களுக்குள் மறைந்திருக்கிற கலைவேட்கையே அவர்களைக் கிறுக்கத் தூண்டுகிறது.<br>❖ எனவே, மாணவர்கள் தங்கள் வேட்கையை நெறிப்படுத்தி, ஒருமுகப்படுத்தி, தனி ஏட்டில் கிறுக்கத் தொடங்கி பெரிய ஓவியராகப் பின்னாளில் மின்னலாம் |

வெற்றிக்கு